# "இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் உம்முடையவைகளே"

ASV வேதாகமத்தில் மத். *6:9-13*ல் உள்ள சீஷர்களின் ஜெபமானது *"தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்பதுடன் முடிவடைகின்றது. இருப்பினும்* NASB வேதாகமமானது *(தமிழ் மொழிபெயர்ப்பும் கூட) பின்வரும் அழகிய முடிவுரையை உள்ளடக்குகின்றது: "... ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்" (மத். 6:13).*

*இந்த வார்த்தைகள் ஏவப்பட்டிராத சேர்க்கை என்று* J.W. *மெக்கார்வி அவர்கள் முற்றிலும் நம்பினார். அவர், ''இந்தக் கோட்பாடானது/மதஉபதேசமானது நல்லதொரு அடிப்படையில் இடைச் செருகல் என்ற வகையில் புறக்கணிக்கப்படுகின்றது'' என்று அவர் கூறினார்.*[1] ASV *மொழிபெயர்ப்பாளர்கள், இந்தக் கடைசி வார்த்தைகளை உள்ளடக்கியதற்குச் சில ஆதாரங்கள் உள்ளன என்று நாம் அறியும்படிக்கு விரும்பினார்கள், ஏனெனில் (இவ்விடத்தில்) அவர்கள் கொடுத்துள்ள அடிக்குறிப்பில், "சில பழங் காலத்தவை உட்படப் அதிகாரமுடையவர்கள் பலர்/அங்கீகரிக்கப்பட்ட பிரதிகள் பல சற்று மாறுபாட்டுடன், இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென் என்று சேர்த்துள்ளனர்" என்று வாசிக்கின்றோம்.*

*நன்கு பழக்கமான இம்முடிவுரையைக் கொண்டுள்ள அந்தப் பழங்காலத்திய அங்கீகரிக்கப்பட்ட பிரதிகளில் சில மிகவும் மதிக்கக் கூடியவைகளாகும். புதிய ஏற்பாட்டின் கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் காணப்படும் வார்த்தைகள் (அது வாஷிங்டன்* D.C.*யில் காக்கப்பட்டதால்)* "W" *அல்லது* "Washington" *என்று அழைக்கப்படுகின்றன. ஆல்பர்ட் ஹக்*[2] *அவர்கள் "W" கையெழுத்துப் பிரதியின் காலம் 5ம் நூற்றாண்டென்று கூறுகையில், International Standard Bible Encyclopedia*[3] *என்ற புத்தகமானது இது "பெரும்பாலும் 4ம் நூற்றாண்டாயிருக்கச் சாத்தியமுண்டு" என்று கூறுகின்றது. இந்த நீண்ட முடிவு Theta*[4] *(ஏழு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தியது) என்ற கிரேக்கக் கையெழுத்துப் பிரதியிலும் உள்ளது. சமீபத்திய கல்வித்துவமானது Thetaவுக்கு அதிகப்படியான பலத்தைக் கொடுக்கின்றது. பழைய இலத்தீன் கையெழுத்துப் பிரதியான f என்பதிலும் புகழ் பெற்ற/நன்கு பழக்கப்பட்ட*

*இந்த முடிவுரை காணப்படுகின்றது, இந்தப் பிரதி ஆறாம் நூற்றாண்டின் காலத்தியது ஆகும். மேலும், இது Peshitta Syriac என்ற பிரதியிலும் தோற்றம் அளிக்கின்றது, இதைப் பற்றி மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:*

> *நமது யுகத்தின் இரண்டாம் நூற்றாண்டில் இது ஏற்படுத்தப் பட்டதென்று நிரூபிக்கப் பல ஆதாரங்கள் இணைந்துள்ளன, மற்றும் இது தொடக்க கால எழுத்தாளர்களினுடையவைகளில் இருந்து ஒரு நூற்றாண்டு கூட முழுமையடையாத கிரேக்க வசனப் பகுதியில் இருந்து, அதாவது புதிய ஏற்பாட்டிலிருந்து அதன்படி மறுவுருவாக்கப் பட்டுள்ளது. இதன் காலத்திலிருந்து, இன்றைய காலம் வரைக்கும் இதுவே சீரியா கிறிஸ்தவர்களின் பொது வேதாகமமாக இருந்துள்ளது, மற்றும் அவர்கள் இதைத் தங்களின் தனிப்பட்ட ஆராதனைக்கு மட்டும் பயன்படுத்தியுள்ளனர் ... வேதாகமத் திறனாய்வு நோக்கங் களுக்கு இதுவே எல்லா பதிப்புக்களிலும் அதிகம் மதிப்புடையதாக உள்ளது.*[5]

*இந்த அழகிய வேத உபதேசமானது பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் இருப்பினும், மிக முக்கியமான பிரதிகள் இதை விட்டு விடுகின்றன. இருப்பினும், ஆராய்வில் உள்ள வார்த்தைகளினால் விளக்கப் படும் சிந்தனைகள் வசன ரீதியானவைகளாய் உள்ளன (1 நாளா. 29:11; 2 தீமோ. 4:18; யூதா 25 ஆகியவற்றைக் காணவும்). இந்தப் பதமானது ஒரு சேர்க்கை என்று எவரும் நிச்சயப்படுத்த முடியாதாகையால், இதற்கென்று ஒப்புவிக்கப்படும் ஒரு பாடமானது நிச்சயமாகவே வீணாய்ச் செலவானதாக இருக்காது.*

*''இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்'' என்று நீங்கள் கூறும் பொழுது, வியப்புணர்வு, துதி மற்றும் பயபக்தி ஆகியவை உங்கள் இருதயங்களில் நிறைய வேண்டும். நீங்கள் சுயாதீனத்தின் உணர்வு ஒவ்வொன்றையும் துறந்து விட்டு, உங்களை முழுமையாகத் தேவனுடைய பாதங்களில் கிடத்து கின்றீர்கள். உங்கள் நாவானது முகமனான கூற்றினைப் பெருக்கெடுக்கச் செய்கின்றது. இது மனப்பாடம் செய்யப்பட்ட ஒரு ஜெபமாக ஒரு கூட்டத்திலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ மறுபடி மறுபடி கூறப்படும் பொழுது வார்த்தைகள் ஏளனம் செய்பவைகளாகவும் வீணானவைகளாகவும் இருக்கின்றன - ஆனால் இவைகள் தாழ்மையான மற்றும் நன்றி நிறைந்த ஒரு இருதயத்தின் ஆழங்களில் இருந்து வரும் பொழுது கனப்படுத்துதலுக்கு இதைக் காட்டிலும் மேன்மையான குறிப்பு வேறெதுவும் இருப்பதில்லை.*

## *"இராஜ்யத்தின்" அர்த்தம்*

*"இராஜ்யம் உம்முடையதே" என்று நீங்கள் கூறும் பொழுது, நீங்கள் எதனை அர்த்தப்படுத்துகின்றீர்கள்? இயேசு தம்முடைய சீஷர்களுக்கு*

ஜெபிக்கக் கற்றுத் தந்த பொழுது இராஜ்யம் இருந்ததில்லை என்று நாம் அறிகின்றோம். இராஜ்யம் வருவதாக என்று அவர்கள் ஜெபிக்க வேண்டு மென்று அவர் விரும்பினார். அப்படியானால், ஏற்கனவே இராஜ்யமானது இருந்துள்ளதாகவும், அது தேவனுக்குரியதாகவும் இயேசு பேசிய இந்த நிறைவு வேண்டுகோளானது எதனை அர்த்தப்படுத்துகின்றது? ஜோசப் ஹென்றி தாயெர்[6] அவர்கள், "இராஜ்யம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையான basileia என்பது "ஒரு இராஜ்யம்" என்பதை மட்டும் அர்த்தப்படுத்துவதாயிராமல், "ராஜரீக வல்லமை, அரசத்துவம், ஆளுகை, அதிகாரம்" ஆகியவற்றையும் அர்த்தப் படுத்துவதாய் உள்ளது என்று கூறினார். அப்பொழுது basileia இருந்ததில்லை, ஆனால் அது (வருமென்று) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தது ("உம்முடைய ராஜ்யம் வருவதாக"; மத். 6:10). இயேசுவானவர் தம்முடைய இராஜ்யமானது ஜெபத்தின் ஒரு முக்கிய கருத்து மூலமாய் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தம்முடைய சீஷர்களிடம் கூறினார். ஏற்கனவே இருந்துள்ள ராஜ்யமும் உண்டு ("ராஜ்யமும் ... உம்முடையவைகளே"). அது என்ன? நிச்சயமாக இது தேவன் (பின்னாளில்) ஏற்படுத்துவார் என்று தானியேல் கூறிய ராஜ்யம் அல்ல (தானி. 2:44); ஏனெனில் கி.பி. 30 பெந்தெகொஸ்தே நாளுக்கு நீண்ட நாட்கள் முன்னதாகவே தேவனுடையதாயிருந்த ஒரு இராஜ்யமானது ஏற்கனவே இருந்துள்ளது. ஒரு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக, தாவீது தேவனைத் துதிக்கையில், "கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது" (1 நாளா. 29:11) என்று கூறியிருந்தார். சீஷர்களுடைய ஜெபத்தின் கடைசி வேண்டுகோளானது தாவீதின் சிந்தையில் இருந்த அதே விஷயத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்; அந்த சங்கீதக்காரருடைய அர்த்தப்படுத்துதலானது, தாயெர் அவர்களால் தரப்பட்ட பின்வரும் அர்த்தம் போன்றதாகவே இருந்திருக்க வேண்டும்: "ராஜரீக வல்லமை, அரசத்துவம், ஆளுகை, அதிகாரம்."[7]

பின்னாளைய இந்த அர்த்தப்படுத்துதலானது (நமக்குக்) கொடுக்கின்ற சிந்தனை என்ன? இது, தேவனுடைய அரசாட்சியின் கீழேயே ஒவ்வொன்றும் இருக்கின்றன என்று அர்த்தப்படுத்துகின்றது: "மாட்சிமை யும், வல்லமையும், மகிமையும் ஜெயமும், மகத்துவமும் உம்முடையவை கள்." இது தேவனுடைய அகிலமாய் உள்ளது, இங்குள்ள ஒவ்வொன்றும் அவருடைய கட்டளையினால் அல்லது அனுமதியினால் மட்டுமே உள்ளன. அவர் எல்லையற்ற ராஜரீகம் உடையவராய் இருக்கின்றார். வேதாகமத்தின் தேவனுக்கு நாம் இவ்வகையான அதிகாரத்தைக் குறிப்பிடும் பொழுது, நாம் பரலோகம் மற்றும் பூலோகம் ஆகியவற்றின் ஒரே தேவனைக் கனப்படுத்து கின்றோம். "சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே" (சங். 96:5) என்று நாம் சத்தமிடுகின்றோம். அவைகளால் காணவோ, கேட்கவோ அல்லது உணரவோ முடியாது (தானி. 5:23). மேட்டிமை மற்றும் புத்திக் கூர்மை (சுய தெய்வமாக்கிக் கொள்ளுதல் மற்றும் சிந்தையை ஆராதித்தல்) ஆகியவற்றின் தேவர்கள் வீணாகவும் பெலவீனமாகவும் உள்ளன. நாம் எதில் நிலைநிற்கின்றோம் என்று தேவன் அறிவதற்கு நாம் அனுமதிக்கின்றோம்:

*வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தர்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு; அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (1 கொரி. 8:56).*

*கர்த்தர் இராஜரிகம் பண்ணுகிறார் (சங். 93:1).*

*நீர் ஒருவரே தேவன் (சங். 86:10).*

*பாபிலோனியப் பாரம்பரியத்தின் பெருவெள்ளச் சண்டைகள் மற்றும் தங்களுக்குள் கோபம் கொண்டிருத்தல்*[8] *ஆகியவற்றுடன் அவர்களின் தேவர்கள்*[9] *தொடர்பு கொண்டிருக்க, வேதாகமத்தின் தேவன், நோவா துன்மார்க்கர் மற்றும் இந்த முழு உலகிற்கும் பொறுப்பாளராயிருந்தார். பாபிலோனிலிருந்து வந்த கதைகள் அதன் தேவர்களை எஜமானர்களாக உயர்த்துவதில்லை; அவர்கள் தண்ணீர்களண்டையில் பயமடைந்தனர், ''நாய்களைப் போலக் கோழைத்தனம்'' கொண்டார்கள். ''இராஜ்யம் உம்முடையதே'' என்று நீங்கள் கூறும் பொழுது, சட்டப்படி நீங்கள், "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா. 6:4) என்று கூறுகின்றீர்கள். காற்றும் கடலும் அவரது ஆணைப்படி செய்கின்றதை நீங்கள் ஒப்புக் கொண்டு, எல்லா மனிதர்களும் "அவர் மேய்ச்சலின் ஆடுகள்" (சங். 100:3) என்று இருப்பதாகக் கூறுகின்றீர்கள்.*

*பெர்ஸியாவின் பழங்கால மதமான ஜொராஸ்ட்ரியனிஸம் என்ற மதத்தில் இரு நேரெதிர்த் தெய்வங்கள் இருந்தன:* Ormazd *(நன்மை மற்றும் ஒளிக்குரியது) மற்றும்* Ahriman *(தீமை மற்றும் இருளுக்குரியது).*[10] *இதற்கு முரணாக, வேதாகமமானது ஒரே ஒரு தேவனை மட்டுமே அறிந்துள்ளது, அவர் தம் ஆளுகையானது காலம் மற்றும் வெளி, மனம் மற்றும் பொருள் மற்றும் ஆத்துமா ஆகியவற்றில் நீக்கமற நிறைந்துள்ளது. இது அவரை, உலகத்தில் உள்ள தீமைக்குப் பொறுப்பாளராக்குகின்றதா? இல்லை, அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன் (உபா. 32:4); அவர் நியாயமும் நேர்மையும் உள்ளவராயிருக்கின்றார். தீமை ஏற்படுவதை அவர் அனுமதிக்கையில், ''ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்" (ஏசா. 45:7) என்று அவர் கூறுமளவுக்கு இராஜ்யமும், உலகத்தின் மீது ஆட்சியதிகாரமும் அவருக்கே முழுமையாக உரிமையுடையதாக உள்ளது.*

*பெர்சிய மதத்தைப் பற்றி அறிந்திருந்த கோரேஸ் அரசரிடத்திலும் தேவன் அந்த வார்த்தைகளைப் பேசினார் என்பதை நினைவில் வையுங்கள். ஆட்சியுரிமை தேவனுக்கு மட்டுமே உரியது என்பதை அந்த அரசரும் நாமும் அறியும்படி தேவன் அனுமதித்தார்: "நானே கர்த்தர், வேறொருவர்*

*இல்லை; என்னைத் தவிரத் தேவன் இல்லை" (ஏசா. 45:5).*

*தேவனுடைய ஆளுகைக்கு எதிராக ஒரு தூதனே கலகம் செய்தாலும், அவனும் கூட அப்பொழுதும் தேவனுடைய கரத்தின் கீழ்தான் இருக்கின்றான் (யூதா 6). அவன் பரலோகத்தை விட்டு வெளியே தள்ளப் பட்டு மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளான். இப்படிப்பட்டதொரு கலகக்காரனும், இராஜ்யம் தேவனுடையதே என்று அறிகின்றான்; நடுக்கத்தில் அவன் தன்னை நெருங்குகின்ற சித்திரவதையைப் பற்றிக் கவலைப்படுகின்றான். ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலே சோதித்தது போல் மக்களைச் சோதிப்பதற்கு அவன் அனுமதிக்கப்படலாம். யோபுவைப் போல ஒருவரைச் சோதிப்பதற்குக் கூட அவன் அனுமதிக்கப் படலாம், ஆனால் அப்படிப்பட்டதொரு சோதனையானது கட்டுப்பாட்டு களின் கீழ் காக்கப்பட்டுள்ளது. பரலோகத்தின் தேவன் முழுமையான பொறுப்பில் உள்ளார், மற்றும் மனமில்லாத சாத்தானும் கூட அவருக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். தேவன் எவற்றையெல்லாம் அனுமதிக்கின் றாரோ, அவைகளையெல்லாம் செய்வதற்குச் சாத்தான் துள்ளிக் குதிக்கின்றான்; ஆனாலும், தேவன் கட்டுப்படுத்துதலைக் காத்துக் கொண்டு, தமது மேலான திட்டத்தில் அவையெல்லாவற்றையும் செயல்படும்படி செய்கின்றார். இதை அவர் எவ்விதம் செய்ய முடியும்? இராஜ்யமும், ஆட்சி யுரிமையும் அவருடையவைகளாதலால் அவர் இதை செய்ய முடியும். அவராலே, அவர் மூலமாக மற்றும் அவருக்கென்றே சகலமும் இருக்கின்றன. அவருடைய அனுமதியின் பேரிலேயே அரசர்கள் ஆளுகின்றனர், ஏனெனில் அவர் இராஜாதி இராஜாவாக எல்லாருக்கும் மேலாக உயர்த்தப் பட்டிருக்கின்றார்.*

*கி.பி. 30ல் பெந்தெகொஸ்தே நாளில் இருந்து, தேவன் பரலோகத்திலும், பூலோகத்திலும், பூமியின் கீழும் உள்ள (தம்முடைய) சகல அதிகாரத்தையும் தமது ஒரே பேறான குமாரனிடத்தில் மனமுவந்து கையளித்தார் (மத். 28:18; பிலி. 2:10). அந்த குமாரனானவர் தமது சொந்த இராஜ்யத்தில் (இராஜ்யத்தின் புத்திரர்களாக வெளியே அழைக்கப்பட்டவர்களிடத்தில்) மட்டுமின்றி, பூமியின் இராஜாக்களுக்கும் அதிபதியாய் இருக்கின்றார் (வெளி. 1:5). இது போன்று காலத்தின் முடிவுரை அவர் இராஜ்யத்தைத் தம்முடைய பிதாவினிடத்தில் ஒப்படைக்கும் வரைக்கும் தொடர்ந்து ஆளுகை செய்வார் (1 கொரி. 15:24).*

*இயேசுவுக்குச் சகல அதிகாரத்தையும் கொடுத்தவர் (தேவன்) நிச்சயமாகவே தம்மைத் தம்முடைய குமாரனுக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளவில்லை. குமாரன் இராஜ்யத்தை மகா தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும்பொழுது, அவர் (குமாரன்) தம்மையும், நம்மையும் கூட அவருக்கு ஒப்புக் கொடுப்பார், மற்றும் தேவனே "சகலத்திலும் சகலமுமாய்" இருக்கும்படி (1 கொரி. 15:28) எல்லாரும் மீண்டுமாய் மகா தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்போம். சொல்லி முடியாத அவரது வரங்களுக்காகவும் கிருபைக்காகவும் நன்றிகள்! நமது தேவனுடைய ஞானத்திற்காகவும் நல் ஆலோசனைக்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம்!*

*கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்;*
*அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.*
*கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற*
*பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே,*
*அவரை ஸ்தோத்தரியுங்கள்.*
*கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து,*
*அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வ சேனைகளே,*
*அவரை ஸ்தோத்தரியுங்கள்.*
*கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே,*
*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி!*
*(சங். 103:19-22).*

## *"வல்லமையும்"*

**இயல்பான வல்லமை**

*தேவனுடைய இராஜ்யத்தின் அர்த்தத்தை நாம் தியானித்திருக்கையில், நாம் சீஷர்களின் ஜெபத்தில் கடைசி வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டு உள்ள இரண்டாவது விஷயத்தைப் பற்றியும் சற்றுக் கற்றுக் கொண்டிருந்திருக்கிறோம்: "வல்லமை." சர்வ வல்லவரின் வல்லமையைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது, நாம் திகைப்படைந்து நிற்கின்றோம்! அவர் ஆச்சரியமான நமது பூமியைப் படைத்து, சிந்தை மற்றும் பொருள் ஆகியவற்றால் அதை நிரப்பியதோடு, அதை அந்தரத்திலே தொங்க வைத்தார் (யோபு. 26:7). மனிதர்களின் மிக வலிவார்ந்த தொலைநோக்கிக் கருவிகளாலும் கூட அளவிட முடியாத அளவுகள் கொண்ட அவருடைய இயல்பான அண்டத்தில் இது ஒரு மிகச் சிறிய அம்சமாகவே உள்ளது. மணிக்கு ஆயிரம் மைல்கள் வேகத்தில் நமது உலகம் அதன் அச்சில் சுழலும்படி செய்து, இரவையும் பகலையும் ஏற்படுத்திய தோடு மட்டுமின்றி, அதே வேளையில் நமது உலகமானது கோடிக்கணக் கான மைல்கள் நீளமுள்ள கண் காணாப் பாதையில் சூரியனைச் சுற்றி வினாடிக்குப் பதினெட்டு மைல்கள் வேகத்தில் பயணம் செய்யும்படியும் அவர் இதைக் காக்கின்றார். புளூட்டோ என்ற கிரகத்திற்கு அவர் நியமித்துள்ள பாதையானது 3.5 லட்சம் கோடி மைல்கள் தூரமுள்ளதாகும் - இது சூரியனை ஒருமுறை சுற்றி வருவதற்கு 248 ஆண்டுகள் ஆகுமளவுக்கு அவ்வளவு தொலைவுடையதாகும். ஒரு வானொலிச் செய்தியானது ஒரு வினாடியில் இந்தப் பூமியை ஏழு முறை சுற்றி வருகின்றது, ஆனால் இதே செய்தியானது மிக அருகாமையில் உள்ள நட்சத்திரத்திலிருந்து அனுப் பப்படுமானால், அச்செய்தி பூமியை வந்தடைய நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தேவைப்படும்படியான அவ்வளவு தொலைவில் அந்த நட்சத்திரம் உள்ளது. ஏசாயா 40:26 வசனமானது, "உங்கள் கண்களை*

*ஏறெடுத்துப் பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத் திட்டமாகப் புறப்படப் பண்ணி அவைகளையெல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது"* என்று கூறுகின்றது. இது மாசசூசட் மாநிலத்தில் உள்ள வில்லியம்ஸ் டவுனின் வில்லியம்ஸ் கல்லூரியில் உள்ள ஹாப்கின்ஸ் வானவியல் ஆய்வுக் கூடத்தின் சுவரில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அண்டத்தின் ஆச்சரியப்படத் தக்க அளவைக் குறித்து தாவீதுடன் சேர்ந்து ஆச்சரியத்தில் மூழ்குவதற்கு ஒருவர் ஆவியினால் ஏவுதல் பெறத் தேவையில்லை, ஆனால் இயற்கையான கண்ணோக்கைப் பெற்றிருந்தாலே போதுமானதாகும். அவர் (தாவீது) பின்வருமாறு கூறினார்:

> *உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய*
> *வானங்களையும்,*
> *நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான்*
> *பார்க்கும் பொழுது,*
> *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும்,*
> *மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன்*
> *எம்மாத்திரம் என்கிறேன்*
> *(சங். 8:3, 4; 33:6-9ஐயும் காணவும்).*

**ஆவிக்குரிய வல்லமை**

தேவனுடைய இயல்பான படைப்பை உண்டாக்கிய வல்லமையானது ஆழ்ந்த பயபக்திக்குரிய ஏவுதலாய் இருக்கையில், பாவிகளைப் பரிசுத்தவான்களாக்கும் அவரது வல்லமையானது தாழ்மையானதாகவும் மெய்சிலிர்க்கச் செய்வதாகவும் இருக்கின்றது. ஒரு அணுவினுள் தேவன் வைத்த சக்தி யாவும் - இரட்சிப்புக்கான தேவ பலனாயுள்ள - சுவிசேஷத்தின் ஒரு எளிய பிரசங்கத்தின் வல்லமையை ஏற்படுத்த முடியாது. குண்டுகள் பயமுறுத்தலாம், ஆனால் அவைகள் மனமாற்றமடையச் செய்ய முடியாது. ஒரு பாவியினிடத்தில் தேவனுடைய அன்பைப் பற்றி அவருடைய தாழ்மையான பிள்ளையொருவர் அமைதியாகப் பேசுவதினால் சாதிப்பதை பூமிக்குரிய எந்த வல்லமையினாலும் செய்ய முடியாது. தேவனுடைய அந்தத் தாழ்மையான ஊழியர் தேவனுடன் இணைந்து ஊழியம் செய்பவராய் இருக்கின்றார்; ஒரு மனிதரின் ஆத்துமாவைத் தாங்குவதற்காக தேவனுடைய வல்லமையினால் கொண்டு வரப்பட்ட கருவியாக அவர் விளங்குகின்றார். இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டதைப் பற்றியதும், அவர் (இயேசு) கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டது பற்றியதுமான நற்செய்தியை அவர் (ஊழியக்காரர்) முன் வைக்கின்றார். இளகிய மனமுடையவர் ஒருவர்மேல் அந்த சுவிசேஷமானது முழு வலிவுடன், செயலாக்கமாய்க் கிரியை செய்கின்ற பொழுது, அவர் ஞானஸ்நானத்தில் தம்மையே இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதிலிருந்து உறவினரோ மற்றும் ஏளனம் செய்பவரோ அவரைத் தடுத்து நிறுத்த முடியாது. தேவனுடைய வல்லமையானது - இது வடகாற்றில் அல்லது சூரியனின் கதிர்களில் அவர்

*கொண்டுள்ள வல்லமையிலிருந்து மாறுபட்டது, ஆனாலும் தேவனுடைய வல்லமை மிகவும் வலிவானதாக இருந்து - (தேவ சாயலாகப் படைக்கப் பட்டும்) - சுயநலமுள்ள பாவத்திருக்குள்ள மனிதரை ஒரு புதிய சிருஷ்டி யாக்க முடிகின்றது! தேவன் ஆச்சரியப்படத் தக்கதாக கிரியைகள் செய்கின்றார் (சங். 86:10ஐக் காணவும்). ஒரு செயலற்ற மனிதர், பரலோகத்தின் வல்லமையினால் நீதியிலும், உண்மையான பரிசுத்தத்திலும் மாற்றப்பட முடியும்.*

***நித்தியமான வல்லமை***

*நாம் மீண்டுமாக மாம்சத்திற்குப் புறம்பான வாழ்க்கை வாழ்வதால், நாம் களிகூருகின்றபடியினால், நாம் மறுபடியும் பிறந்துள்ளதால் அளவற்ற நன்றி செலுத்துதலில் பெரு மகிழ்வடைகின்றோம். ஏனென்றால், ''விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மேன்மையான மகத்துவத்தினால்'' (எபே. 1:19) இது உண்மையாய் உள்ளது. நமது சுதந்தரமானது, ''தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே ...'' (எபே. 1:19அ) தேவனுடன் என்றென்றும் ஜீவிப்பதாக உள்ளது. "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று" நாம் அறிந்திருக்கிறோம் (2 கொரி. 4:14) மற்றும் எல்லாம் நம்முடையவைகளே என்றும் நாம் அறிகின்றோம் (1 கொரி. 3:21).*

*பாவத்தினால் சபிக்கப்பட்டு மற்றும் அழியும் நிலையில் உள்ள இந்த இழிந்த சரீரங்களை அவர் எவ்விதத்தில் தமது மகிமையுள்ள சாயலுக் கொப்பாக்குவார்? அது எப்படியென்று நாம் அறியோம், ஆனால் "நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய" (எபே. 3:20) அவருடைய வல்லமையில் நாம் விசுவாசம் கொண்டுள்ளோம். எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத் தக்க அவருடைய வல்லமையான செயலின்படியே (பிலி. 3:21), நாம் அவிசுவாசத்தினால் அலைக்கழிக்கப்படாது, விசுவாசத்தில் பலமாய் வளர்ந்து, தேவனுக்கு மகிமை செலுத்துகின்றோம் (ரோமர் 4:20). நமது சரீரங்களை உயிப்பிக்கும் வல்லமையை அவர் பெற்றிருப்பது மட்டுமே நாம் ஆதங்கப்படும் விஷயமாய் இருப்பதில்லை, ஆனால் விசுவாசமற்ற ஆத்துமாக்களை அவர் எரி நரகத்தில் தள்ள வல்லமையுள்ளவராய் இருக்கின்றார் என்பதும் நாம் ஆதங்கப்படும் விஷயமாய் இருக்கின்றது (லூக். 12:5). அவர் அவ்வாறு செய்ய விரும்புகிறவரல்ல, ஆனால் அவர் அந்த வல்லமையுடையவராய் இருக்கிறார்.*

## "என்றென்றும் மகிமை"

தேவனுடைய ஆட்சித்துவமானது கேள்வி கேட்கப்பட முடியாததாக

*உள்ளது, மற்றும் அவரது வல்லமையானது மகா மேன்மையானதாக உள்ளது. அவரது மகிமையானது பிரகாசமுள்ளதாக, எந்த ஒரு சலவைத் தொழிலாளியும் உண்டாக்க முடிகின்றதைக் காட்டிலும் அதிகம் வெண்மையானதாக உள்ளது. மனிதர் அல்லது தூதர் எவரும் உண்டாக்கக் கூடிய ஒவ்வொரு கனமும், நம்மைப் படைத்து தமது கிருபையினாலே மீட்ட அவருக்கே வளமாக உரித்தாகுகின்றது. எல்லா மகிமையும் பிதாவுக்கே உரித்தானது ஏன் என்பதற்கான பல காரணங்களில், அவர் சபையை வடிவமைத்தார் என்பது பிரதானமானதாக உள்ளது.*

*நேர்த்தியாகத் தைக்கப்பட்டு, அழகான வடிவம் அமைக்கப்பட்ட மெத்தை விரிப்பொன்றை நான் கண்ணோக்குகையில், அதைச் செய்தவர் யாரென்று நான் காணாதிருப்பினும், தானாகவே நான், "இந்த மெத்தை விரிப்பின் புகழ்ச்சி யாவும் அந்தப் பெண்மணிக்கே உரித்தாவதாக" என்று நினைக்கின்றேன். காலத்தின் நிறைவேற்றத்தையும், சபையையும் - மீட்கப்பட்டு, மறுபடி பிறந்து, அழைக்கப்பட்டவர்களின் கூட்டத்தையும் - தூதர்களும் பிரதான தூதனும் பரலோகத்திலிருந்து கீழே நோக்கிப் பார்க்கின்றனர். வான மண்டலங்களில் உள்ள துரைத்தனங்களும் அதிகாரங்களும் தேவனுடைய சபையில் உள்ள பரிசுத்தமாக்கப்பட்ட மக்களைக் காணும் பொழுது, அவர்கள் தேவனுடைய ஞானம் வளம் நிறைந்த காட்சி வகையில் முன் வைக்கப்பட்டதைக் கண்டனர். உலகத் தோற்றத்திற்கு முன்பே தேவன் தம்முடைய சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பதைப் பற்றி வியந்திருந்த அவர்கள், அவருடைய ஞானம் தெளிவாகக் காட்டப்பட்டதையாவது காண முடிந்தது, ஏனெனில் பாவிகள் பரிசுத்தவான்களாகக் கூடிய வழி ஒன்றினைத் தேவன் கண்டு பிடித்திருந்தார். மனிதரோ அல்லது தூதரோ சபையின் மகா மேன்மையைக் கருதும் பொழுதெல்லாம், அவர் (மனிதர் அல்லது தூதர்) வெள்ளைச் சிங்காசனத்தின் பக்கமாய்த் திரும்பி, தமது முக்காட்டை நீக்கி விட்டு, "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபே. 3:21) என்று கூறுவாராக.*

## "ஆமென்"

*சீஷர்களின் ஜெபத்தில் உள்ள நிறைவு வேண்டுகோளின் கடைசி வார்த்தையானது "உறுதிப்படுத்த, ஆதரவு கொடுக்க" என்று அர்த்தப்படும் எபிரெய வார்த்தையொன்றில் (ஆமென்) இருந்து வருகின்றது. வேதாகமம் முழுவதிலும் இது பின்வரும் அர்த்தம் கொண்டுள்ளது: "அது அப்படியே ஆகட்டும்"; "ஆகட்டும் அப்படியே " (உபா. 27:15-26; 1 நாளா. 16:36; நெக. 8:6; ரோமர் 1:25; எபி. 13:21). நீங்கள் சீஷர்களின் ஜெபத்தை ஆழ்ந்து சிந்திக்கையில் இது உங்களுக்கு புதிய, உற்சாகமான அர்த்தம் தருவதாக.*

> *கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவை களெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடை*

*யது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர் (1 நாளா. 29:11; மற்றும் யூதா. 24, 25ஐயும் காணவும்).*

---

*குறிப்புகள்*

[1]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 64. [2]Albert Huck, *Synopsis of the First Three Gospels,* 9th ed., ed. Hans Lietzmann, trans. Frank Leslie Cross (New York: American Bible Society, 1936), XI. [3]*கிரேக்கக் கையெழுத்துப் பிரதியின் பெயரானது கிரேக்க அகர வரிசையின் எட்டாவது எழுத்தில் இருந்து வருகின்றது.* [4]Charles Fremont Sitterly, "Text and Manuscripts of the New Testament" in *International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 5:2953. [5]J. W. McGarvey, *Evidences of Christianity* (Cincinnati: Standard Publishing Co., 1886), 34. [6]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901: reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 96-97. [7]Ibid. [8]George Frederick Wright, "The Deluge of Noah" in *International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids. Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 2:823. [9]*நவீனத் தத்துவவாதியான* S. R. Driver *அவர்கள் வேதாகமத்திற்குப் பின்வரும் புகழுரை அளித்தார்: "(படைப்பு மற்றும் வெள்ளப் பெருக்கு பற்றிய) பாபிலோனிய எடுத்துரைப்புகள் பல தெய்வ வணக்கம் கொண்டவைகளாயிருக்கையில், அவைகளைப் பற்றிய வேதாகம எடுத்துரைப்புகள் (ஆதி. 1 மற்றும் 6-9) தூய மற்றும் மேன்மைப் படுத்தப்பட்ட ஒரு தெய்வ வணக்கத்தின் வாகனமாக ஏற்படுத்தப் பட்டன; ..."* (Quoted in J. McKee Adams, *Ancient Records and the Bible* [Nashville: Broadman Press, 1946], 143). [10]A. H. Newman, *A Manual of Church History,* vol. 1, *Ancient and Mediaeval Church History (To A.D. 1517),* rev. and enl. (Philadelphia: American Baptist Publication Society, 1899), 36.